www.tamilarangam.net

# பின்தள மாநாடு தொடர்பான தளச் செயற்குழுவின் அறிக்கை

1986-02-19ம் திகதி தொடக்கம் 1986-02-26 திகதி வரை தளத்தில் கழகத்தின் அனைத்து அங்கங்களையும், தோழர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய விதத்தில் ஜனநாயக ரீதியான மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மேற்படி மாநாடு தளமாநாடு என்று அழைக்கப்பட்டது. இது கழகத்தின் ஈழப்பகுதியின் அதிகாரத்துவமிக்க மாநாடாகவே பிரகடனப்படுத்தப்பட்டது. இம்மாநாட்டின் தீர்மானங்களை கழக மத்திய ஸ்தாபனம் ஏற்றுக் கொண்டு அதன்படி செயல்படத் தவறுமானால் தளமாநாட்டின் மூலம் தீர்மானிக்கப்படும் தலைமை தனித்துச் செயல்படும் உரிமை பெற்றதாகும் என்னும் முடிவும் எடுக்கப்பட்டது. இம்முடிவைப் பிரேரித்தது மத்திய ஸ்தாபன அங்கத்தவரும். கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினருமான தோழர் வாசுதேவாவாகும் இது மாநாட்டு பேராளர்களால் ஏகமனதாக கொள்ளப்பட்டது. இத்தீர்மானத்தை அடியொற்றி ஈழப்பகுதியின் அதிகாரத்துவ தலைமையான எமக்கு சுயமான முடிவுகள் எடுக்கும் உரிமை உண்டு.

இம்மாநாட்டிற்கு மத்திய ஸ்தாபனமோ: ஸ்தாபனத்தின் அதிஉயர் அங்கமாகத் தன்னைத்தானே நியமித்துக் கொண்ட கட்டுப்பாட்டுக் குழுவோ (இது மூவரைக் கொண்டது) ஸ்தாபன ரீதியாகத் தமது ஒத்துழைப்பைக் காட்டவில்லை. ஸ்தாபனத்தின் அனைத்து நிறைவேற்று அதிகாரமுள்ள செயலதிபராக தன்னைத் தானே நியமித்துக் கொண்ட தோழர் உமாமகேஸ்வரனே கூட எதுவித ஒத்துழைப்பும் காட்டவில்லை. ஒத்துழைப்பு காட்டாதது மாத்திரமல்ல, கபடத்தனமான முறையில் மாநாட்டைக் குழப்பவும் முற்பட்டார். பயமுறுத்தல்களும் நடைபெற்றன. ஆனால் இவர்களின் ஒத்துழைப்பு எதுவும் இன்றி மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. கட்டுப்பாட்டு அங்கத்தவர்கள் இருவரும், மத்தியஸ்தாபன அங்கத்தவர்களில் ஏழுபேரும் மாநாட்டின் தீர்மானங்களை ஆக்குவதிலும், தலைமை அங்கத்தை தேர்ந்து எடுப்பதிலும் பங்கெடுத்தனர். இவ் ஒன்பது பேரும் மாநாட்டை தாம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதாக எழுத்து மூலமான உத்தரவாதமும் வழங்கினர்.

மாநாட்டின் நோக்கம் பின்வருவாறு அமைந்திருந்தது.

1. ஸ்தாபனத்துள் நிலவும் அராஜகவாதத்தை இல்லாதொழிப்பது, மக்களுடன் ஸ்தாபனத்துக்குள்ள உறவுகளில் அராஜகவாதம நிலவுவதை இல்லாதொழிப்பது.

2 ஜனநாயக மத்தியத்துவத்தையும், உட்கட்சி ஜனநாயகத்தையும் ஸ்தாபனக் கோட்பாடாகக் கொண்ட ஸ்தாபன அமைப்பை உருவாக்குவது.

3. கழகம் இதுவரை பின்பற்றி வந்த இராணுவ மூலோபாயத்தை நிராகரிப்பது. புதிய, செயல் திறனுள்ள எமது சொந்த மூலவளங்களிலும் பூகோள, சமூக உருவாக்கத்திலும் சார்ந்துள்ள புதிய இராணுவ மூலோபாயத்தை வகுத்துக் கொளவது. அதேபோல் பிரபுத்துவ தன்மை பெற்ற இராணுவ கூட்டமைப்பிற்குப் பதிலாக மக்கள் இராணுவத்தை உருவாக்குவது.

இம்மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு ஈழத்திற்கு வெளியில் உள்ளவர்களை உள்ளடக்கிய மாநாடொன்றை நடாத்துவது இம் மாநாட்டில் மத்திய ஸ்தாபனமும், கட்டுப்பாட்டுக் குழுவும் தம்மை சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. அனைத்து வல்லமை பெற்ற யாராலும் தட்டிக் கேட்கப்பட முடியாத கட்டுப்பாட்டுக் குழு என்ற அமைப்பு வடிவம் இல்லாதொழிக்கபபட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இம்மாநாட்டை நடாத்துவதற்காக ஈழத்துப் பொதுச் சபையால் தீர்மானிக்கப்பட்ட ஒத்துழைப்பு குழு ஒன்று செயல்படவேண்டும் என்றும், மாநாட்டு ஏற்பாடுகளில் தள அரசியல் செயற்குழு பங்கெடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது ஈழத்திற்கு வெளியே இங்கே உள்ள பெரும்பான்மை தோழர்களின் நிர்ப்பந்தத்தாலும மத்திய ஸ்தாபனத்தின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் நிர்ப்பந்தத்தாலும் மாநாட்டை நடாத்துவதில் கட்டுப்பாட்டுக் குழு வேண்டாவெறுப்பாக தள அரசியல் செயல் கமிட்டியின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டது. நாமும் பல புறக்கணிப்புக்களின் மத்தியில் சகிப்புத் தன்மையுடன் ஸ்தாபனத்தின் ஒருமுகப்பாட்டை பேணுவதை நோக்கமாகக் கொண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளுடன் ஒத்துழைத்தோம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால், மாநாட்டை எப்படி நடாத்துவது என்பது சம்பந்தமாகவோ, மாநாடு தனது இலக்குகளை அடைய வேண்டுமானால் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், உருவாக்கப்பட வேண்டிய அமைப்பு வடிவங்கள் என்ன என்பது சம்பந்தமாகவோ எதுவித விவாதத்தையும் மத்திய ஸ்தாபனம் 18-ம் திகதி வரையும் மேற்கொள்ளவில்லை. கட்டுப்பாட்டுக் குழுவோ, செயலதிபரோ கூட எந்தவிதமான வேலைத் திட்டத்தையும் விமர்சனம், சுயவிமர்சனங்களையும் முன்வைக்கவில்லை. நாம் இதுவரை பின்பற்றி வந்த இராணுவ மூலோபாயத்தை விவாதத்திற்கு உள்ளாக்கவில்லை. மாறாக பத்திரிகைகளுக்கு தொடர்ந்தும் தனது பல்லவியையே பாடிக்கொண்டிருக்கிறார். மத்திய ஸ்தாபனக் கூட்டத்தில் இதுபற்றி கேட்டதற்கு தளமாநாட்டு தீர்மானங்களை கட்டுப்பாட்டுகுழு ஏற்க முடியாது. நான் கட்டுப்பாட்டுக் குழுவையே பிரதிநிதித்துவப்படுத்துகிறேன் என இறுமாப்புடன் கூறினார். ஆனால் கட்டுப்பாட்டுக்குழு அங்கத்தவர்களுள் இருவர் தளமாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றவர்கள் என நாம் நினைவுபடுத்தியபோது அதற்கு தாலை ஒன்றும் கூறமுடியாது என இருமாப்புடன் கூறினார். மற்றைய இரு கட்டுபபாட்டுக்குழு அங்கத்தவர்களும் கூட மௌனமாக இருநதனர்.

மாநாட்டை நடாத்துவதில் மத்திய ஸ்தாபன அங்கத்தவர்களில் ஒரு பகுதியினர் தமது ஜனநாயக உரிமைகள் மீறப்படுகிறது என குரல்கொடுத்தபோது அதற்கு செவிமடுக்க கட்டுப்பாட்டுக் குழு மறுத்தது மத்திய ஸ்தாபன கூட்டத்தை கூட்டுவதையே இழுத்தடித்தது. மத்திய ஸ்தாபனத்தைக் கலைக்கும் அளவுக்குக் கூட சென்றது.

தளமாநாடு முடிந்த காலத்தில் இருந்து இன்றுவரை தளஅரசியல் செயல் கமிட்டி அங்கத்தவர்களில் இருந்து சாதாரண இராணுவ வீரர்களாக இருக்கும் தோழர்கள் வரை பலரை தமது அபகீர்த்திப் பெற்ற உளவுப்படையினரைக் கொண்டு கொலைப் பயமுறுத்தல் செய்துள்ளனர். செய்தும் வருகின்றனர்.

இந் நிலைமைகளில் முகுந்தன் தலைமையில்—கட்டுப்பாட்டுக்குழு— நாடத்தப்படும் மாநாடு அதன் இலக்குகளை நிறைவேற்றாது என்பது எமது ஒருமித்த முடிவாகும். அது மாத்திரமல்ல, கழகத்தின் இச் சீர்குலைவு நிலைக்கு பிரதான தலைமைக் காரணமாக அமைந்துள்ள உமாமகேஸ்வரனால் கூட்டப்படும் இம் மாநாடு அவரும், அவரைச சார்ந்தவர்களும் மீண்டும் தமது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ள எடுக்கும் முயற்சியாகவே நாம் கருதுகிறோம். ஆகவே நாம் இம் மாநாடு தொடர்பான வேலைகளில் இருந்து நாம் ஒதுங்கிக் கொள்வதாக முடிவெடுத்தோம்.

மத்தியஸ்தாபனம் தனக்குள் உள்ள முரண்பாடுகளை தீர்த்து ஜனநாயக முறையில் மாநாட்டை கூட்டுமானால் நாம் அதன் வெற்றிக்கு ஒத்துழைக்கத் தயாராக உள்ளோம். இது சாத்தியப்படாத பட்சத்தில் மத்திய ஸ்தாபனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் உத்தியோக பூர்வமான முறையில் ஸ்தாபனத்தின் தலைமை சங்கமாக மாறி ஜனநாயக ரீதியான முறையில் கூட்டும் மாநாட்டுடன் ஒத்துழைக்க நாம் தயாராய் உள்ளோம்

இதன் அர்த்தம் நாம் பெரும்பான்மை மத்திய ஸ்தாபன அங்கத்தவர்களை ஸ்தாபன தலைமையாக ஏற்கிறோம் என்பதோ அவர்கள் தவறற்றவர்கள் என கருதுகிறோம் என்பதோ அல்ல, தளமாநாட்டின் முடிவின்படி மத்திய ஸ்தாபனமே கடந்தகால முழு தவறுக்கும் பொறுப்பேற்க வேண்டும். மத்திய ஸ்தாபனத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை. மத்திய ஸ்தாபனமும் காட்டுப் பாட்டுக் குழுவும் கலைக்கப்பட வேண்டும். கழக மாநாடு முன் வைத்த ஒழுங்கு முறையின் படி புதிய மத்திய ஸ்தாபனம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் பிரச்சினை, ஈழத்திற்கு வெளியே இங்கு தங்கிஉள்ளவர்களின் மாநாட்டை கூட்டும் உத்தியோக பூர்வமான உரிமை யாருக்கு உண்டு என்பதேயாகும். தளமாநாட்டின் முடிவின்படி தற்போதைய மத்திய ஸ்தாபனத்திற்கே இதற்கான உரிமை உண்டு. கட்டுப்பாட்டு குழுவிற்கே அல்ல இந்த அடிப்படையில்தான் நாம் பெரும்பான்மை மத்திய ஸ்தாபனத்தால் கூட்டப்படும் மாநாட்டை ஏற்றுக் கொள்கிறோமே தவிர வேறு காரணங்களுக்காகவில்லை.

கூட்டப்படும் மாநாடு ஜனநாயக பூர்வமானதாக அமைய வேண்டுமானால் உமாமகேஸ்வரன் தலைமையின் அராஜகவாத மிரட்டலினால் ஸ்தாபனத்தை விட்டு வெளியேறிய அனைவரும் - அவர்கள் விரும்பினால் பங்குபற்றக் கூட்டியதாகவே மாநாடு அமையவேண்டும். முகுந்தன் கோஷ்டியின் மாநாடாக இது அமையுமானால் நாம் இம்மாநாட்டையும் ஏற்கத் தயாராய் இல்லை என்பதை அறிவித்துக் கொள்ளவிரும்புகிறோம்.

''அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்''

*20—07—1986*

*தளச் செயற்குழு*

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்